# மனையறம் சிறக்க வாழ்த்து!



**செல்வன்: இராஜசேகர், செல்வி: கிருஷ்ண ஜெயந்தி**

இல்லறம் என்னும் நல்லறம் காண,
வல்லோர் வகுத்த வடிவுடை நாளில்,
நல்லவர் சேர்ந்து நான்மறை ஓத,
இல்லக் கிழத்தியாக **கிருஷ்ண ஜெயந்தி**யை,

வல்லோன் **இராஜ சேகர**னும் கைத்தலம் பற்ற,
எல்லா உறவுகளும் இயைந்து நடந்து,
நல்லதோர் வாழ்த்தை நயந்து வழங்கி,
இல்லறம் தன்னில் இணைந்து கொண்ட,



வளர்புகழ் நாளை மனத்தில் இருத்தி,
களம்பல கண்டு வாகையும் சூடி,
தளமென அன்பில் தழைந்து நிறைந்து,
உளமார வாழ்ந்து உன்னதம் பெருகி,

மருவிலா மக்கள் செல்வமும் கொண்டு,
மாண்புடன் வாழ, இதயம் தோய்ந்த,
அன்பில் நிறைந்து, இறைவனை வேண்டி,
இற்றை நாளில் நீடு வாழ வாழ்த்துவேனே!
அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
ஒட்டகுடி இல்லம், செம்பாக்கம்.
17-09-2022



